# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ　　அதிவிசேஷமானது

අංක 2078/21 - 2018 ජූලි 03 වැනි අඟහරුවාදා - 2018.07.03

*2078/21 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ)வின் கீழான கட்டளை*

**2018 ஆம் ஆண்டின் 150 ஆம் இலக்க கட்டளை**

எனது குறிப்பு இல. 4-3/7/2017/எச்டபிள்யூ /39
பி . செ. கு. இல. 3/1/87/2017, 2017/02

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற
மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி அமைச்சு
'மிஹிகத மெதுர'
1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018, யூன் 20.

**அட்டவணை**

**1. காணி எடுத்தல் உத்தியோகத்தர் :** பிரதேச செயலாளர், ரிதீகமை

**2. காணியின் விபரம் :** வடமேல் மாகாணம், குருநாகலை மாவட்டம், ரிதீகமை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 529, பரகஸ்வெவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் உதன்விட்ட கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை மா அதிபரால் 2017.05.18 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட முதற்சுவட்டு வரைபடத்தில் இல. கேயூ/ ஆர்டீஜீ/ 2017/ 193 இல் குறிப்பிடப்பட்ட காணித் துண்டுகளின் எல்லைகள்:

01. **துண்டு இல. 1 - பரதலுபொத்த - விஸ்தீரணம்: 1.6790 ஹெக்.** வடக்கு: இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவு; கிழக்கு: மெல்சிறிபுர பண்ணைக்கு சொந்தமான பரதலுபொத்த வத்தை மற்றும் ஐ. என். ஜோன் உரிமை கோரும் பரதலுபொத்த; தெற்கு: துண்டு இல. 2, ஐ. என். குசுமா குணவர்தன உரிமை கோரும் கொஸ்கஹமுலகால, ஐ. என். காமினி நிஹால் சோமசிறி உரிமை கோரும் பரதலுபொத்த மற்றும் பிரதேச சபை வீதி; மேற்கு: மெல்சிறிபுர பண்ணைக்கு சொந்தமான பரதலுபொத்த வத்தை.

02. **துண்டு இல. 2 - பரதலுபொத்த - விஸ்தீரணம்: 0.0007 ஹெக்.** வடக்கு: துண்டு இல. 1 மற்றும் மெல்சிறிபுர பண்ணைக்கு சொந்தமான பரதலுபொத்த வத்தை; கிழக்கு: மெல்சிறிபுர பண்ணைக்கு சொந்தமான பரதலுபொத்த வத்தை மற்றும் ஐ. என். ஜோன் உரிமை கோரும் பரதலுபொத்த; தெற்கு: ஐ. என். ஜோன் உரிமை கோரும் பரதலுபொத்த மற்றும் ஐ. என். குசுமா குணவர்தன உரிமை கோரும் கொஸ்கஹமுலகால; மேற்கு: ஐ. என். குசுமா குணவர்தன உரிமை கோரும் கொஸ்கஹமுலகால மற்றும் துண்டு இல. 1.

7 - 536